சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 02.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 62/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | சுப்பிரமணியன் |
| தந்தை பெயர் | : | அன்னதுரை |
| கிராமம் | : | அருப்புக்கோட்டை |
| தாலுக்கா | : | அருப்புக்கோட்டை,<br>விருதுநகர் மாவட்டம். |
| தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| வயது | : | 32 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பாக திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் காவல்

நிலையத்தில் உதவி ஆய்வாளராக கடந்த 01.01. 2025 ஆம் தேதி பணியிலிருந்தபோது மதியம் 12.00 மணிக்கு கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வலங்கைமான் தாலுக்கா, விடையல் கருப்பூர், தெற்கு தெருவை சேர்ந்த அன்பழகன் மகன் அபிக்கண்ணன் என்பவரிடம் விசாரணை செய்து அவர் அளித்த அ.சா.ஆ-1 ஆன புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து மாலை 6.10 மணியளவில் நிலைய மனு எண்.02/2025 புகாரை பதிவு செய்தேன். நான் வழங்கிய மனு ரசீது **அ.சா.ஆ-20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 04.01.2025 ஆம் தேதி 13.30 மணியளவில் நிலைய குற்ற எண்.03/2025 -ல் சட்டப்பிரிவுகள் 126(2), 296(b), 118(1), 351(3) of BNS r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ-21** ஆக குறியீடு செய்யப்படுகிறது.அ.சா.ஆ-21 ஆன முதல் தகவல் அறிக்கையை தஞ்சாவூர் மாவட்டம் முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மனித குடியுரிமை பாதுகாப்பு தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பினேன். அந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திருவாரூர் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்கள் பார்வைக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அதன் ஒரு நகலை நிலைய கோப்பிற்கு வைத்தேன். அது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணை செய்தார்கள். விபரம் சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.02 18:24:19 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.